

# உன் வீட்டில் என்னத்தைப் பார்த்தார்கள்?

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *ஏசாயா 38; 39; 1கொரிந்தியர் 7:12-15; 1பேதுரு 3:1,2; எபிரெயர் 6:12; 13:7; 3யோவான் 11; ஏசாயா 58:6,7,10,12.*

**மனன வசனம்:** நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். 1பேதுரு 2:9.

ஆண்டவருடைய கிருபையால் நல்ல குடும்பம், நல்ல வேலை, நல்ல ஆரோக்கியம், நல்ல பொருளாதார நிலை நமக்குக் கிடைத்திருக்கலாம். அல்லது, கிடைக்காமல் இருக்கலாம். தற்சமயம் குடும்பத்தில் வேதனையும், குழப்பமும் காணப்படலாம். எப்படியிருந்தாலும், எசேக்கியா ராஜாவைப் பார்ப்பதற்காக பாபிலோனிலிருந்து வந்த ஸ்தானாபதிகளைப் போல உங்களுடைய வீட்டிற்கு யாராவது வரும்போது, என்னத்தைக் காண்கிறார்கள். அந்த ராஜாவிடம் ஏசாயா தீர்க்கதரிசி, “உம்முடைய வீட்டில் அவர்கள் என்னத்தைப் பார்த்தார்கள்?” என்று கேட்டதுபோல உங்களிடம் கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? ஏசா 39:4.

பரலோக தூதர்கள் என்னத்தைப் பார்க்கிறார்கள்? எப்படிப்பட்ட ஆவி வீட்டில் காணப்படுகிறது? இரக்கம், தயவு, அன்பு காணப்படுகிறதா? அல்லது பதற்றம், எரிச்சல், கோபம், பிரிவினை காணப்படுகிறதா? வருகிறவர்கள் இயேசு இருப்பதைக் காண்கிறார்களா?

எப்படிப்பட்ட குடும்பத்தை உருவாக்கியிருக்கிறீர்கள்? இன்றைய குடும்பங்களில் தவிர்க்கமுடியாத பதற்றங்களும், போராட்டங்களும் காணப்பட்டாலும், அருமையான குடும்பத்தை உருவாக்க தேவையான ஒரு சில விஷயங்கள்பற்றி இந்த வாரம் பார்ப்போம்.

# ராஜாவின் தவறிலிருந்து பாடம்

**கேள்வி: எசேக்கியா குணமாகி, பாபிலோனின் ஸ்தானாபதிகள் அவரைப் பார்க்க வந்த சம்பவத்தை வாசியுங்கள். 2நாளா 32:25,31; ஏசாயா 38,39.**

எசேக்கியா குணமான அற்புதம் பற்றித் தெரிந்துகொள்ளஅந்த ஸ்தானாபதிகள் ஆர்வங்காட்டினார்கள். தான் குணமான விதம்பற்றி எசேக்கியாஎதுவுமேசொல்லவில்லை. விசாரிக்கவந்தஸ்தானாபதிகள் மெய்யான தேவனை அறியும்படி அவர்களுடைய இருதயங்களைத் திறந்திருக்கக்கூடிய விஷயங்களை அவர் வலியுறுத்தவில்லை. தான் குணமானதற்காக 38ம் அதிகாரத்தில் நன்றிசொல்கிறார், ஆனால் 39ம் அதிகாரத்தில் அதுபற்றி அவர் வாய்திறக்கவே இல்லை.

'அவனைச் சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிட்டார்.' அந்த அரசாங்க விஜயம் முக்கியத்துவம் வாய்ந்தது; எசேக்கியா அது குறித்து ஜெபித்து, தீர்க்கதரிசிகளிடமோ ஆசாரியர்களிடமோ ஆலோசனை கேட்டதாகத் தெரியவில்லை. தேவனும் தலையிடவில்லை. மக்களுக்குத் தெரியப்படுத்தவில்லை; ஆவிக்குரிய ஆலோசகர்களிடமும் ஆலோசனை கேட்கவில்லை; தானும் தன் தேசத்தாரும் தேவ பணியைச் செய்யவேண்டியவர்கள் என்பதையே எசேக்கியா மறந்துபோனார். தேவ ஆசீர்வாதத்தை சாதகமாக எடுப்பதும், தேவ இரக்கத்தைப் பெற்றதும் சுயநிறைவடைவதும் காணப்படுகிறது; இதைக்காட்டுவதற்காகவே 2நாளா 32:31இல் ஆசிரியர் அவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம்.

**கேள்வி: குடும்பத்தில் எவ்வாறு உண்மைத் தன்மையுடன் நடக்கலாம் என்பதற்கு எசேக்கியாவின் சம்பவத்திலிருந்து ஒரு சில படிப்பினைகள் கீழே சொல்லப்பட்டுள்ளன? அதுபோக வேறு என்ன படிப்பினைகள் உள்ளன?**

கிறிஸ்தவர்களின் வீட்டிற்கு யாராவது வரும்போதெல்லாம், கிறிஸ்துவின் சீடர்களை அவர்கள் பார்க்கவேண்டும்.

வீட்டிற்கு வருகிற எல்லாருமே ஆவிக்குரிய விஷயங்கள் பற்றி பேச்செடுக்க மாட்டார்கள். ஆனால் சூழ்நிலையை உணர்ந்து, பொருத்தமான விதத்தில் நற்செய்தியைப் பகிர்வதற்கான வழிகளை கிறிஸ்தவர்கள் காணவேண்டும்.

தங்களுடைய சாதனைகளையும் வசதிகளையும் தேவன் தந்த ஆசீர்வாதங்களாக கிறிஸ்தவர்கள் பார்க்கலாம். அதற்காக அவற்றை விளம்பரப்படுத்த அவர்கள்அழைக்கப்படவில்லை. 'நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு' அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். 1பேதுரு 2:9. அல்லது, பாவத்தில் சாகக்கிடந்தவர்களை கிறிஸ்து உயிர்ப்பித்து, உன்னதங்களில் அவரோடு உட்கார வைத்ததுபற்றி அறிவிக்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எபே 2:4-6.

உங்கள் குடும்பத்தின் மூலம் எவ்வளவு தூரம் சாட்சிபகர முடிகிறது? உங்கள் வீட்டிற்கு வருகிறவர்களிடம், கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் விசுவாசத்தை எவ்வாறு சாட்சி பகரலாம்?

# முதலாவதாகக் குடும்பம்

நாம் சுவிசேஷம் சொல்லும்போது, நம் குடும்பத்தில் உள்ளவர்கள்தாம் முதலாவது அதை ஏற்றுக்கொள்ள அதிக வாய்ப்புள்ளது. குடும்பத்தைக் காட்டிலும் மேலான ஊழியக்களம் எதுவுமில்லை.

**கேள்வி: குடும்பத்தில் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்வது பற்றி யோவான் 1:40-42இல் என்ன கருத்துகள் உள்ளன? உபா 6:6,7; ரூத் 1:14-18.**

மேசியாவைக் கண்டதாகச் சொன்னதோடு, சீமோனாகிய தன் சகோதரன் இயேசுவைச் சந்திக்கவும் அந்திரேயா ஏற்பாடு செய்கிறார். இயேசுவைக் குறித்து ஆர்வமூட்டும் விதத்தில் சொல்லி விட்டு, அவரை நேரடியாக அறிமுகப்படுத்துகிறார்; குடும்பத்தில் நம் உறவினர்களிடம் சுவிசேஷத்தைப் பகிர்வதற்கான ஓர் எளிய சூத்திரம் இது. அறிமுகம் செய்தபிறகு, அந்திரேயா தலையிடவில்லை. அன்று முதல், இயேசுவுக்கும் பேதுருவுக்கும் ஒரு தனிப்பட்ட உறவு உருவானது.

யாரை விசுவாசிக்க வேண்டுமென பிள்ளைகளுக்குக் காட்டுங்கள். பிள்ளைகளுக்கு சுவிசேஷம் சொல்லி என்னவாகப் போகிறது என்று நினைக்காதீர்கள். குடும்ப விசுவாசத்தை பிள்ளைகள் தானாக ஏற்றுக்கொள்வார்களென பெற்றோர் நினைக்கிறார்கள். அது தவறான எண்ணம். தங்களுக்கு முன்மாதிரியாக இருப்பவர்களைப் பார்த்துதான் சிறுவர்களும் வாலிபர்களும் மாறுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் தனிப்பட்ட விதத்தில் இயேசுவை அறிமுகப்படுத்தவேண்டும்; அதற்கான வாய்ப்பை உருவாக்கவேண்டும். நம் விசுவாசம் பற்றிப் போதிப்பது அவசியமென்பதை உபாகமம் 6 வலியுறுத்துகிறது. குடும்ப ஜெபமும், தனிப்பட்ட ஜெபமும் நல்ல ஆவிக்குரிய பழக்கங்கள்; குடும்பத்தில் அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். வாலிபர்களையும் சிறுவர்களையும் பயிற்றுவிக்க, நேரம் செலவிட்டு, ஊக்கமாக முயலவேண்டும்.

**கேள்வி: நகோமின் சுவிசேஷ ஊழியம் சொல்லும் பாடம் என்ன? ரூத் 1:8-22.**

நகோமி வாழ்க்கையில் தாழ்ச்சியான தருணம் அது. மருமகளை தன்னிடமிருந்து போகச் சொல்கிறார்; தன்னுடைய இழப்புகளால் கோபமடைந்து, மனச்சோர்வடைந்து ஆண்டவரைக் குறைசொல்கிறார். அப்படிப்பட்ட ஒரு நகோமியைத்தான் அப்போது ரூத் பார்க்கிறார். ரூத் 1:15,20,21. தேவனை அறிமுகப்படுத்துவது குறையுள்ள ஒரு நபராக இருந்தாலும்கூட, ஒரு பூரண தேவனைப் பற்றிக் கேள்விப்படுகிற வாலிபர்கள் முற்றிலும் தங்களை அர்ப்பணிக்க முடியும் என்பதைத்தான் ரூத்தின் அருமையான சாட்சி காட்டுகிறது.

குடும்பம்தான் முக்கிய ஊழியக்களம் என்று பார்த்தோம்; உங்கள் குடும்ப அங்கத்தினர்களிடம் எத்தகைய மனநிலையுடன் நடந்துகொள்கிறீர்கள்? இரட்சிக்கப்படாத உறவினர்களை கிறிஸ்துவிடம் வழிநடத்த என்னவெல்லாம் செய்யலாமென குடும்பத்துடன் ஒரு பட்டியலைப் போடுங்கள்.

# வெற்றி தரும் சமாதானம்

**கேள்வி: அவிசுவாசி ஒருவரை திருமணம் செய்திருப்பவருக்கு புதிய ஏற்பாடு சொல்கிற ஆலோசனை என்ன? 1கொரிந்தியர் 7:12-15; 1பேதுரு 3:1,2.**

**கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையின் ஆசீர்வாதம்.** 'அவிசுவாசியான வாழ்க்கை துணையோடு வாழ்வது தேவனுக்கு பிரியமாக இருக்காதோ? அது தங்களுக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் தீட்டாகுமோ?' என்று மனமாறிய விசுவாசிகள் கவலைப்பட்டார்கள். அப்படியில்லை என்று 1கொரிந்தியரில் பவுல் சொல்கிறார். மனமாற்றத்திற்குப் பின்னரும் திருமணத்தின் புனிததன்மையும், பிணைப்புகளும் தொடரவேண்டும். விசுவாசியானவர் அவிசுவாசியான தன் வாழ்க்கைத் துணையையும் பிள்ளைகளையும் 'பரிசுத்தப்படுத்துகிறார்.' இங்குப் பரிசுத்தம் என்பது, ஒரு விசுவாசி தன் அவிசுவாச வாழ்க்கைத்துணையுடன் சேர்ந்து வாழும்போது, கிருபையின் ஆசீர்வாதங்களை அறிகிற பாக்கியத்தை தனது வாழ்க்கைத் துணைக்குக் கிடைக்கச்செய்வதைக் காட்டுகிறது.

ஆனால், மனவேதனை இருக்கும். அவிசுவாசி தன் திருமணத்தை முறிக்கக் தீர்மானிக்கலாம். அதன் விளைவுகள் மோசமாக இருக்கும். ஆனாலும், மனிதர்களின் தெரிந்துகொள்ளும் உரிமையை மதிப்பவர் தேவன்; அதனால்தான் அவர் இரக்கத்துடன், 'பிரிந்துபோகட்டும்' என்று சொல்கிறார். விசுவாசிகள் 'இப்படிப்பட்ட விஷயத்தில் அடிமைப்பட்டவர்களல்ல.' 1கொரி 7:15.

**சமாதானமாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.** ஒரு குடும்பத்தில் தம்பதியரில் ஒருவர் அவிசுவாசியாக இருக்கலாம்; ஆனால் கிறிஸ்துவின் சமாதானம் குடும்பத்தில் அரசாள வகைதேடவேண்டும். பிரச்சனைகளுக்கு மத்தியிலும் சுவிசேஷம் ஆளுவதைக் காட்டவேண்டும், தன் வாழ்க்கைத்துணை அவிசுவாசியாக இருந்தாலும், அவர் தன் மாம்சம் என்பதால், அவர் சுகவாழ்வில் அக்கறைகாட்டவேண்டும்.

**கேள்வி: அவிசுவாசியான வாழ்க்கைத் துணையிடம் எவ்வளவு தூரத்திற்கு பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்?**

அன்புடன்கூடிய அக்கறை, தடுமாற்றமற்ற உண்மைதன்மை, தாழ்மையான சேவை, ஆதாயப்படுத்தும் சாட்சி போன்றவை விசுவாசியிடம் காணப்படவேண்டும்; அப்போதுதான் அவிசுவாசியான தன் வாழ்க்கை துணையை ஆதாயப்படுத்த அதிக வாய்ப்புள்ளது. வாழ்க்கை துணையிடம் காட்டும் பணிவானது, கிறிஸ்துவின் மேலான பயபக்தியால் உருவாகவேண்டும். எபே 5:21. அவிசுவாசியான வாழ்க்கைத்துணையிடம் பணிவுடன் நடக்கும்போது, அங்குக் கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுக்கப்படுவது வெளிப்படும். தேவனுடைய வார்த்தைகளுக்கு உண்மையாக இருப்பதாகச் சொல்லி, வாழ்க்கைத்துணையின் வன்கொடுமைகளைச் சகித்துக்கொண்டு இருக்கக்கூடாது.

உங்கள் சபையில் அவிசுவாச வாழ்க்கைத் துணையுடன் வாழ்வதால் சங்கடப்பட்டு வருகிற ஒருவருக்கு என்னென்ன வழிகளில் உதவலாம்?

# குடும்ப வாழ்க்கையின் நோக்கம்: சாட்சிபகருதல்

**கேள்வி: பின்வரும் வசனங்களில் 'பின்பற்றுதல்' என்கிற வார்த்தை என்னென்ன அர்த்தங்களில் பயன்பட்டுள்ளது? ஒரு கிறிஸ்தவனாக மாறுவதையும், ஒரு கிறிஸ்தவனாக வளர்வதையும் பற்றி அவ்வார்த்தைகள் சொல்வது என்ன? 1கொரி 4:16; எபே 5:1; 1தெச 1:6; எபி 6:11; 13:7; 3யோவான் 11.**

முன்மாதிரியைப் பார்த்து பின்பற்றுவது கற்றல் செயல்முறையில் முக்கியமான ஒன்று. மக்கள் யாரை அல்லது எதைப் பார்க்கிறார்களோ அப்படியே மாறுகிறார்கள். எல்லா உறவுகளுக்கும் இது பொருந்தும்; குறிப்பாக குடும்பங்களுக்குப் பொருந்தும். பிள்ளைகள் தங்கள் பெற்றோரையும், உடன்பிறப்புகளையும் பார்த்து நடக்கிறார்கள். கணவன்-மனைவியர் ஒருவரை ஒருவர் பார்த்து நடக்கிறார்கள். எனவே கிறிஸ்தவ குடும்பத்தினரும் தம்பதியரும் பிற குடும்பத்தினருக்கும் தம்பதியருக்கும் வல்லமையான முன்மாதிரிகளாகத் திகழலாம்.

**சமுதாய செல்வாக்கின் வல்லமை.** நம் குடும்ப அனுபவமானது மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும்படி நாம் நடந்துகொள்ளும்போது, சாட்சிபகருகிறோம். திருமணம் அல்லது குடும்ப உறவுகள் குறித்த நல்ல முன்மாதிரிகள் அநேகருக்குக் காணக்கிடைப்பதில்லை. இயேசுவின் ஆவியால் வித்தியாசமான வாழ்க்கை வாழலாம் என்பதை அவர்கள் நம் குடும்பத்தில் காணவேண்டும். "சமுதாய செல்வாக்கு ஓர் அற்புதமான வல்லமை. நாம் தீர்மானித்தால், நம்மைச் சுற்றிலுமுள்ளோருக்கு உதவுகிற வழிவகைகளாக அதைப் பயன்படுத்தலாம்" என்று எலன் ஒய்ட் எழுதுகிறார். *MH, p 354.*

திருமணத் தம்பதியர் பிற தம்பதியர்களை விருந்துக்கு, பேசிப்பழகுவதற்கு அல்லது வேத ஆராய்ச்சிக்கு அழைக்கலாம். அல்லது, திருமண வளர்ச்சித் திட்டத்தில் சேர்ந்து பங்குபெறலாம். அப்போது தங்களைப் பார்த்துக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்கலாம். பரபரஸ்பர உறவு, உறுதிப்பாடு, தகவல்தொடர்பு, பிரச்சனைக்குத் தீர்வுகாண்தல், கருத்து வேறுபாடுகளைச் சகித்தல் போன்றவை குடும்ப வாழ்க்கையில் கிறிஸ்து இருப்பதை சாட்சியிடுபவை.

**கேள்வி: எனவே நாம் எதைக் குறித்து எப்போதும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்? எரேமியா 17:9; யோவான் 2:25; ரோமர் 3:23.**

**கிறிஸ்துவைப் பின்பற்றுகிற விசுவாசிகளை முன்மாதிரிகளாகப் பாருங்கள்.** முன்மாதிரி மனிதர்களும்கூட குறைவுள்ளவர்கள்தாம். கிறிஸ்தவ குடும்பம் என்றால் குறையே இல்லாத குடும்பம் என்று அர்த்தமல்ல. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை முன்மாதிரிகளாகப் பார்க்கும்படி புதிய ஏற்பாடு சொல்கிறது. மனிதர்கள் குற்றங்குறையுள்ளவர்களாக இருந்தாலும், கிறிஸ்தவ விசுவாசம் அவர்களுடைய வாழ்க்கையில் வெளிப்பட்டால், பார்க்கிறவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள்.

உங்கள் குடும்பம் கிறிஸ்தவ சாட்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்க என்ன செய்யலாம்?

# நட்பைப் பரவச்செய்கிற மையங்கள்

**கேள்வி:** உபசரிப்பு பற்றி ஏசா 58:6,7,10-12; ரோமர் 12:13; 1பேதுரு 4:9 வசனங்கள் சொல்வதையும், வேதாகமத்தில் சில குடும்பத்தினர் உபசரித்த விதம்பற்றி கீழே சொல்லப்படுவதையும் ஒப்பிடுங்கள். உபசரிப்பின் என்னென்ன பண்புகள் வெளிப்படுகின்றன?

ஆபிரகாம்-சாராள் (ஆதி 18:1-8) ____________________

____________________

ரெபெக்காள், அவள் குடும்பம் (ஆதி 24) ____________________

____________________

சகேயு ____________________

____________________

தேவைப்படுகிற ஒருவருக்கு அடிப்படை தேவையான உறைவிடம், உணவு, நட்பு போன்றவற்றை வழங்குவதுதான் உபசரிப்பு. தன்னையே கொடுக்கிற அன்பின் வெளிப்பாடு இது. பசியுள்ளோருக்கு ஆகாரமும், தாகமுள்ளோருக்கு பானமும் கொடுப்பது தமக்கு சேவை செய்ததாகுமென இயேசு சொன்னார்; எனவே உபசரிப்பானது ஓர் ஆவிக்குரிய விஷயமாகிறது. மத்தேயு 25:34-40. அக்கம்பக்கத்தினரை விருந்துக்கு அழைப்பது முதல், வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு தங்க இடமளிப்பது வரை ஒரு குடும்பத்தினர் ஊழியம் செய்யலாம். அல்லது, ஒருவரோடு நட்புடன் பழகலாம், ஒருவரோடு சேர்ந்து ஜெபிக்கலாம் அல்லது வேத ஆராய்ச்சி நடத்தலாம். தேவ அன்பால் தொடப்பட்டு, வார்த்தையிலும் செய்கையிலும் அவர் அன்பை வெளிப்படுத்த விரும்புகிறவர்களின் இருதயங்களிலிருந்து மெய்யான உபசரிப்பு தானாகப் புறப்படும்.

உபசரிப்பதற்கான வசதியும், நேரமும் அல்லது ஊக்கமும் இல்லையென்று சொல்கிற குடும்பத்தினர் உண்டு. தங்களுடைய வழக்கத்தையும் தாண்டி, அவிசுவாசிகளைக் கவனிப்பதை தவறென்று, அதற்கான திறமையில்லையென்று, அதுபற்றி சரியாகத் தெரியவில்லையென்று நினைப்பவர்களும் உண்டு. மற்றவர்களுடன் இடைபடுவதால் உருவாகிற சிக்கல்கள் வேண்டாமே என்று ஒதுங்குகிறவர்களும் உண்டு. இன்றைய குடும்பத்தினர் பலருக்கு எது உபசரிப்பு, எது பொழுதுபோக்கு என்கிற வித்தியாசம் தெரியவில்லை.

உங்களுடைய குடும்ப வாழ்க்கையானது எவ்வாறெல்லாம் உங்களுடைய ஆவிக்குரிய நிலையைப் பிரதிபலிக்கிறது?

____________________

____________________

____________________

# வெள்ளி ஜூன் 21

## மேலும் படிக்க:

**சுவிசேஷ ஊழியத்தில் குடும்பத்தின் ஆற்றல்.** "பிரசங்கிக்கப்படுகிற எந்தப் பிரசங்கங்களைக் காட்டிலும் உண்மையுள்ள ஒரு குடும்பமானது மனிதர்களுடையஇருதயங்களிலும்வாழ்விலும்உண்டாக்குகிறதாக்கம்தான் அதிக ஆற்றல் வாய்ந்த தாகும்.

"நம் செல்வாக்கு எல்லை குறைவாக இருக்கலாம், நம் திறமை குறைவாக இருக்கலாம், நம் வாய்ப்புகள் குறைவாக இருக்கலாம், நாம் பெற்றிருப்பவை குறை வாக இருக்கலாம்; ஆனாலும் நம் குடும்பங்களுக்குக் கிடைக்கிற வாய்ப்புகளை உண் மையோடு பயன்படுத்தும்போது, அற்புதமான சாதனைகளைச் செய்யலாம்."

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *ஒரு குடும்பத்தினரைப் பார்த்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் யாராவது சபையில் இருக்கிறார்களா? எந்த விஷயம் அதிக தாக்கத்தை ஏற்படுத்தினதாம்? அந்த அனுபவத்திலிருந்து வகுப்பினர் என்ன படிப்பினையைப் பெறலாம்?*

2 *வகுப்பில் இருப்பவர்களில் யாருக்காவது அவிசுவாசியான வாழ்க்கை துணை இருப்பாரானால், வகுப்பாக அவருக்கு எவ்வாறு உதவலாம்?*

3 *குடும்பத்தில் விசுவாசத்திற்கு எதிராகச் செயல்படுகிற அழுத்தங்கள் யாவை? அவற்றைப் பட்டியலிடுங்கள். அவற்றிற்கான தீர்வுகளையும் எழுதுங்கள்.*

4 *கிறிஸ்தவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையானது பிள்ளைகளுக்கும், அவிசுவாசியான வாழ்க்கை துணைகளுக்கும், பிற உறவினர்களுக்கும், விருந்தினர்களுக்கும் சாட்சியாக இருக்கிறது. மனிதர்கள் குறையுள்ளவர்கள். எனவே, குடும்பத்தில் அவர்கள் விசுவாசத்தைப் பகிர்ந்துகொண்டதும் எல்லா உறவினர்களும், விருந்தினர்களும் மனமாறப் போவதில்லை. ஆனால் விசுவாசமுள்ளவர்கள் இரட்சகரின் நாமத்தை முன்னிட்டு பிறரை உபசரிக்கும்போது, தாங்கள் சந்திப்பவர்களை கிருபையின் எல்கைக்குள் கொண்டுவரமுடியும். உங்களுடைய வீட்டிற்கு வருபவர்களில் உங்களுடைய குடும்பம் எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்குகிறது? உங்களுடைய குடும்பம் சிறந்ததொரு சாட்சியாக விளங்க நீங்கள் என்ன செய்யலாம்?*

# எச்ஐவி-யிலும் தேவனைத் துதித்தல்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ, அட்வென்டிஸ்ட் மிஷன்**

மொசம்பிக்கின் நிகுவடலா என்கிற கிராமத்தில், ஓர் அட்வென்டிஸ்ட் குடும்பத்தில் பிறந்தவள் சாமோ. ஏழு வயதிலேயே ஞானஸ்நானம் பெற்றாள். கிராமத்தில் உயர்நிலை பள்ளி இல்லாததால், அங்கிருந்து 30 நிமிட பயணத்தூரத்திலிருந்து ஒரு பள்ளியில் படித்தாள். அங்கு புகைப்பழக்கத்திற்கும், மதுப்பழக்கத்திற்கும் அடிமையானாள்.

அவள் புகைக்கிறாள், குடிக்கிறாள் என்பது அவளுக்குத் திருமணமாகும் வரையிலும் அவளுடைய பெற்றோருக்குத் தெரியாது. ஒரு நாள் மகளைப் பார்ப்பதற்கு அப்பா வந்திருந்தார். அவள் புகைப்பதைப் பார்த்துவிட்டார், ஆனாலும் அவர் எதுவும் சொல்லவில்லை. சாமோவுக்குத்தான் குற்ற உணர்வு தாங்கமுடியவில்லை. அன்றிலிருந்து குடிப்பதையும் புகைப்பதையும் நிறுத்தினாள்.

குடிப்பழக்கத்தை விடுவது அவ்வளவு எளிதாக இல்லை. பயங்கர வலிப்பு ஏற்பட்டது. நிலைமை மோசமானதால், அவளுடைய கணவன் தென் ஆப்ரிக்கவுக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றான். குடிப்பழக்கத்தை நிறுத்தாவிட்டால், மூன்று மாதங்களில் மரிக்க நேரிடுமென மருத்துவர் எச்சரித்தார். 45 நாள் மறுவாழ்வு திட்டத்தின் உதவியால், குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டு, புதிய மனுஷியாக மொசம்பிக்கிற்குத் திரும்பினாள்.

பிறகு அவளுடைய கணவன் மரித்தான். அவனுக்கு எச்ஐவி இருந்ததும், அது அவளுக்கும் தொற்றியிருந்ததும் ஆறு வருடங்களுக்கு பிறகுதான் தெரிந்தது.

“அன்றுமுதல் நான் தேவனைத் துதித்துக் கொண்டே இருக்கிறேன்” என்கிறாள்.

எப்போதையும்விட இப்போதுதான் அதிக ஆரோக்கியமாக உணர்கிறாளாம், மனச்சாட்சியும் தெளிவாக இருப்பதாகச் சொல்கிறாள்.

இன்று, நான்கு பேரக்குழந்தைகளுக்கு பாட்டியாகிவிட்டார் சாமோ. தங்கம் மற்றும் விலையுயர்ந்த கற்களை வாங்கி, விற்கிற தொழிலைச் செய்து வருகிறார். ஆனால் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை ஊக்கப்படுத்துவதுதான் அவருக்கு விருப்பமான பணி.

“தங்களுக்கு எய்ட்ஸ் பாதிப்பு இருப்பதை அறிந்ததும் அநேகர் நம்பிக்கையிழந்து விடுகிறார்கள். மற்றவர்கள் ஒதுக்குவதால் சீக்கிரமே மரித்துப் போகிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களை அட்வென்டிஸ்டுகள் சந்தித்து, ஜெபித்து, அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்” என்று சாமோ சொல்கிறார்.



“இயேசுவுக்குள் நான் பெற்றிருக்கும் நம்பிக்கையையும் அவருடைய இரண்டாம் வருகையையும் நான் அறவித்துவருகிறேன்” என்று சொல்கிறார்.

**மொசம்பிக்கில், எய்ட்ஸால் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு ஆதரவு இல்லும் துவங்க 2019 முதல் காலாண்டு காணிக்கை உதவியது.**